HRC

# மனித உரிமை மாணவர் மன்றம்

# Human Rights Club







## மாணவர் மன்ற விதிகள் & வழிகாட்டு நெறிகள்

# அத்தியாயம் 1

## முன்னுரை

பள்ளிகளில் மனித உரிமைக் கல்வி எனும் திட்டம் 1997-ஆம் ஆண்டு, சென்னை நகர் சார்ந்த ஒன்பது பள்ளிகளில் பரீட்சார்த்தமாகத் தொடங்கப்பட்டது. தொடர்ந்து பல்வேறு கட்டங்களாக (Phase) விரிவுபடுத்தப்பட்டு இன்று நாடெங்கிலும் 19 மாநிலங்களில் 5000 பள்ளிகளில் 4000 ஆசிரியர்களோடு மூன்றரை லட்சம் குழந்தைகளை உள்ளடக்கிச் செயற்பட்டு வருகிறது.

தமிழகத்திலும் தமிழக எல்லை தாண்டியும் பள்ளிகளில் மனித உரிமைக் கல்வி எனும் இத்திட்டம் அய்க்கிய நாட்டவையின் மனித உரிமைக் கல்விக்கான பத்தாண்டுகள் (1995-2009), தொடர்ந்து அறிவிக்கப்பட்ட மனித உரிமைக் கல்விக்கான உலகத்திட்டம் (2005-2009), இரண்டாம் கட்டமாக விரிவாக்கப்பட்ட உலகத்திட்டம் (2006-2014) இவையெல்லாம் மனித உரிமைக் கல்வியை முன்னெடுப்பதற்கான வழிகாட்டு நெறிகளாக அமைந்தன. கல்வி மூலம் மனித உரிமைகளை வளர்த்தல் எனும் உயரிய நோக்கில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

மனித உரிமைக் கல்வி நிறுவனம் பள்ளிகளில் 6,7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில், தயாரிக்கப்பட்ட மனித உரிமைப் பாடங்கள் மூலம் அறிமுகப்படுத்தி வருகிறது. மனித உரிமைகள்-ஓர் அறிமுகம், குழந்தை உரிமைகள், பாகுபாடு என்ற மூன்று வழிகாட்டு நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. தமிழில் தயாரிக்கப்பட்ட இந்நூல்கள் ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, கன்னடம், இந்தி, வங்காளி, ஒரியா போன்ற மொழிகளில் அந்தந்த மாநில சூழலுக்கேற்ப மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாநிலத்திலும் பாடத்திட்ட தயாரிப்புக்கென வல்லுநர் குழுவொன்றும் உள்ளது. ஆண்டுதோறும் 3.25 இலட்சம் நூல்கள் அச்சிடப்பட்டு குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன.

பள்ளிகளில் மனித உரிமைக் கல்வி என்பது ஒரு பாடம் சார்ந்த, தேர்வு சார்ந்த, வகுப்பறை சார்ந்த ஒன்றாக இருக்கக் கூடாது என்பதில் மனித உரிமைக் கல்வி நிறுவனம் உறுதியாகவுள்ளது. மனித உரிமைகள் வளர்க்கப்பட வேண்டிய மானுட மதிப்பீடு என்பதில் தளரா நம்பிக்கை கொண்டுள்ளது. எனவே மூன்றாண்டுகள் மனித உரிமைகள் பற்றிய தெளிவைப் பெற்ற குழந்தைகளிடம், மனித உரிமைகளைத் தக்க வைப்பது எப்படி என்பதை யோசித்த போது, மாணவர் மன்றங்கள் (Clubs) பற்றிய எண்ணம் உருவானது. வகுப்பறை தாண்டி, பள்ளி வளாகத்தையும் கடந்து அருகமைச் சமூகங்களுக்கும் மனித உரிமைப் பற்றிய அறிவை, ஆற்றலை கொண்டு செல்லவும் இம்முயற்சியில் குழந்தைகளையே ஈடுபடுத்தி, அவர்களை எதிர்காலத்தில் உரிமைக் காப்பாளர்களாக மாற்றுவதே மன்றங்களின் நோக்கமாகும்.

## அத்தியாயம் 2

## மாணவர் மன்றங்களும் அகில உலக உடன்படிக்கைகளும்

மனித உரிமைகளை மக்களிடம் எடுத்துச் செல்வதற்கு பல்வேறு முறைகள் உள்ளன. 1948-ல் உருவான அகில உலக மனித உரிமைப் பிரகடனமும், பல்வேறு வழிகாட்டு நெறிகளைத் தருகிறது. மனித உரிமைகள் பற்றி கடந்த அறுபது வருடங்களாக சர்வதேசச் சமூகங்கள் மனித உரிமைகளை வாழ் நெறியாக்கும் வகையில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. சங்கமாக கூடுதற்கும், கருத்துக்களைச் சுதந்திரமாகத் தெரிவிப்பதற்கும் சர்வதேச உடன்படிக்கைகள் மிகப் பெரிய முக்கியத்துவம் அளித்துள்ளன. சனநாயக ரீதியில் கூடவும் சனநாயக உரிமைகளைக் காக்கவும் மானுடர் அனைவர்க்குமுள்ள உரிமையை அய்நாவின் எந்தச் சாசனமும் மறுக்கவில்லை.

கல்வி மூலம் மனித உரிமைகளைக் கொண்டு செல்வது ஒரு வழியென்றால், வகுப்பறையையும் தாண்டி மனித உரிமைகளை மக்கள் மொழியாக்கும் வகையிலும் பல புதிய முயற்சிகளை மேற்கொள்ள சர்வதேச உடன்படிக்கைகள் பல இம்முயற்சிக்கு ஆதரவு தருகின்றன.

குறிப்பாக 1948 – ல் உருவான சர்வதேச மனித உரிமைப் பிரகடனம் மற்றும் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை இரண்டும் இம்முயற்சிக்கு துணை நிற்கும் சரத்துக்களைத் தருகின்றன.

### அகில உலக மனித உரிமைப் பிரகடனம் - 1948

### பிரிவு - 3

### வாழ்விற்கான உரிமை

ஒவ்வொருவருக்கும் உயிர் வாழவும் உரிமையுண்டு. இவ்வாழ்வைச் சுதந்திரத்தோடும் பாதுகாப்போடும் வாழ்வதற்கும் உரிமையுண்டு.

**பிரிவு - 19**

**கருத்துரிமை**

ஒவ்வொருவரும், தங்களுடைய கருத்துக்களைப் பேச்சு மூலமோ, எழுத்து மூலமோ வெளிப்படுத்த உரிமையுண்டு. அவ்வாறே தகவல்களைப் பெறுவதற்கும், பெற்ற தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் பரப்புதற்கும் உரிமையுண்டு. இத்தகவல்கள் தேச எல்லை தாண்டி சர்வதேச அளவிலும் அமையலாம்.

**பிரிவு - 20**

**'சங்கம்' அமைக்கலாம்**

ஒவ்வொருவரும், அமைதியான முறையில் கூட்டமாகக் கூடவும், சங்கமமைக்கவும் உரிமையுண்டு. ஆனால் சங்கத்தில் சேரும்படி எவரையும் கட்டாயப்படுத்த முடியாது.

**குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை**

**பிரிவு - 12**

**கருத்து உருவாக்கும் உரிமை**

தனது சொந்தக் கருத்துக்களை உருவாக்கிக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்த எந்தவொரு குழந்தையும் தன்னைப் பாதிக்கும் எல்லா விஷயங்களிலும் அக்கருத்துக்களை தைரியமாக, தாராளமாக எடுத்துரைக்க உரிமையுண்டு.

**பிரிவு - 13**

**கருத்துச் சுதந்திர உரிமை**

குழந்தைக்கு கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையுண்டு. இந்த உரிமையில் நாட்டு எல்லைகள் (Frontiers) கணக்கிலெடுக்கப்படாமல், வாய்வழியாகவோ, எழுத்து மூலமாகவோ, அச்சிலோ, கலை இலக்கிய வடிவிலோ அல்லது குழந்தை விரும்பும் எந்தவொரு தொடர்பு சாதனம்

வழியாகவும், அனைத்துவகை விவரங்கள், கருத்துக்கள் பிற விஷயங்களைத் தேடியறியவும் பெற்றுக் கொள்ளவும் குழந்தைக்கு உரிமையுண்டு.

**பிரிவு - 14**

**மதவுரிமை**

சிந்தனை, மனசாட்சி மற்றும் மதம் முதலியவை தொடர்பாக ஒரு குழந்தைக்கு உரிமையுண்டு.

**பிரிவு - 15**

**தொடர்பு கொள்ள உரிமை**

அமைதியாக கூடுவதற்கும், ஒருங்கிணைப்பிற்கும், குழுவாதலுக்கும், பிறரோடு தொடர்பு கொள்வதற்கும் குழந்தைக்கு உரிமை உண்டு.

**பிரிவு - 23**

**மாற்றுத் திறனாளிகள்**

மனரீதியாகவோ அல்லது உடல் ரீதியாகவோ பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும் சுயமரியாதை, தன்னிறைவு முதலியவற்றை உண்டாக்கக் கூடியதான, மாற்றுத் திறனாளி குழந்தையும் சமூகப் பணியில் குறிப்பிடத்தக்க ஆக்கப்பூர்வமான பங்காற்றும்படிச் செய்வதுமான இணக்கமான சூழலில் ஒரு முழுமையான, கௌரவமான வாழ்க்கை வாழவும் உரிமை உண்டு.

**பிரிவு - 31**

**ஓய்வு மற்றும் விளையாட்டு**

குழந்தைக்கு ஓய்வெடுக்கவும், இளைப்பாறவும், அதன் வயதிற்குத் தகுந்த விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குச் செயல்பாடுகளில் ஈடுபடவும், கலாச்சார வாழ்க்கை மற்றும் கலைகளில் சுதந்திரமாகப் பங்கெடுக்கவும் உரிமை உண்டு.

# அத்தியாயம் - 3

# மனித உரிமை மாணவர் மன்றம்

## முகப்புரை:-

....................ஊர்...............பள்ளி மாணவர்களாகிய நாங்கள், எம் பள்ளியில் மனித உரிமை மாணவர் மன்றத்தைத் துவக்க உறுதி பூண்டுள்ளோம். இம்மன்றத்தின் மூலம் மாணவர்களாகிய நாங்கள் மனித உரிமைகளை வளர்த்தெடுக்கவும், பாதுகாக்கவும் சமூக அமைதியை நிலைநாட்டவும் பணியாற்றுவோம் என்றும் உறுதி கூறுகிறோம்.

மனித உரிமை மாணவர் மன்றத்தின் உறுப்பினராகிய நாங்கள் எம் பள்ளியில், குடும்பத்தில் மற்றும் சமூகத்தில் அமைதியை வளர்க்கவும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் வளர்த்தெடுப்பதிலும் எங்களை அர்ப்பணிக்க உறுதி பூணுகிறோம்.

மாணவர் மன்ற சாசனத்திற்கு ஏற்ப பள்ளியில் மனித உரிமை மாணவர் மன்றம் அமைக்கவும் மாணவர் மன்ற சாசனம் அளிக்கும் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் செயல்படவும் உறுதியேற்கிறோம்.

## இலக்கு

- மனித உரிமைகளை தாம் வாழும் சமூகத்தின் கலாச்சாரமாய் வளர்த்தெடுக்கும் வகையில் மாணவ மாணவிகளின் பங்கை ஊக்கப்படுத்துதல்.
- குழந்தைகள் அனைவரும் மனித உரிமைகள் பற்றிய அறிவையும் திறனையும் பெறல்; மனித உரிமைகளை மானுட மதிப்பீடாக உள்வாங்கல்; குழந்தைகள் குழந்தைப் பருவத்தின் இனிமையை முழுமையாக அனுபவித்தல்.

- மனித உரிமைகளைத் தன் வயமாக்கிய குழந்தைகள் மாணவர் மன்றத்தில் பங்கேற்பதன் மூலம் உரிமை மீறலற்ற சமூகத்தை உருவாக்கல்.

**கொள்கை:-**

- குழந்தைகளுக்குச் சமூகம் பற்றிய விழிப்புணர்வோடு வாழ்க்கைத் திறனையும் அளித்தல்; குழந்தைகள் பெறும் அறிவு மற்றும் திறன்கள் மூலம் பள்ளியைச் சுற்றி வாழும் சமூகத்தினரிடம் மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தல்.
- பங்கேற்பு அமைப்புகள் மூலம் சனநாயகத்தின் உள்ளடக்கத்தை அறியச் செய்தல்

**குறிக்கோள்:-**

**மனித உரிமை மாணவர் மன்றத்தின் குறிக்கோள்**

- மனித உரிமைகள் பற்றிய அறிவு, திறன்களை அளித்தல்
- குழந்தைகளிடம் இயல்பிலேயே படிந்திருக்கும் மனித உரிமை எனும் மதிப்பீடுகளை வெளிக்கொணரல்.
- குழந்தைகளின் மனோநிலை, சிந்தனை ஆகியவற்றில் நேர் மறையான மாற்றங்கள் உருவாக்க முயலல்.
- மனித உரிமைகளை வாழ்நெறியாகக் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்கும் கருவிகளாகக் குழந்தைகளை மாற்றல்.
- மனித உரிமை மாணவர் மன்றங்கள் மூலம் மாணவர்கள் மனித உரிமைக் காப்பாளர்களாக மாறும் துணிவை உருவாக்கல்.

**மாணவர் மன்றத்தின் குறிப்பான நோக்கங்கள்:-**

- மாணவர்கள், ஆசிரியர்கள், குடும்பத்தில் மற்றும் சமூகத்தில் மனித உரிமைகள் பற்றிப் பொதுவாகவும் குழந்தைகள் உரிமைகள் பற்றி சிறப்பாகவும் உணரச் செய்ய வேண்டும்.
- குழந்தை உரிமை மீறலால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவியாக இருத்தல்.
- குழந்தைகள் உரிமைகள் சார்ந்த பிரச்சனையில் பள்ளிக்கும், அண்டைச் சமூகத்திற்கும், குடிமைச் சமூக அமைப்புகளுக்கும் மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கும் ஓர் ஆக்கப்பூர்வமான தொடர்பை ஏற்படுத்துதல்.
- பள்ளிகளில் சாதி, சமய, இன, மொழி, பால், பிறப்பிடம், வர்க்கம், திறன் அடிப்படையில் நிகழும் பாகுபாடுகளுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தல்.
- பள்ளிகளில் மாற்றுத் திறனாளிகள் பங்கேற்பதற்கான உகந்த சூழலை உருவாக்கல்.
- பள்ளிகளில் குழந்தைத் தொழிலாளர்கள், அகதிகளின் குழந்தைகள், இடம் பெயர்ந்த குடும்பங்களின் மாணவர்கள், புலம் பெயர்ந்த மாணவர்களை சேர்க்க வழிவகை செய்தல்.
- மாணவர்களிடம் தன்னார்வத்தை ஊக்குவித்தல்.
- மாணவர் மன்றத்தில் உறுப்பினர்களின் தேவைகளுக்கு ஏற்ப பிற செயல்பாடுகளையும் இணைத்துக் கொள்ளல்.

## அத்தியாயம் - 4

### மனித உரிமை மாணவர் மன்றத்தின் அமைப்பு:-

### உறுப்பினராகும் முறை:-

- 6ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை உள்ள மாணாக்கர் உறுப்பினராகலாம்.
- ஒரு மாணவர் மன்ற கிளையுள் ஒரு பள்ளியில் படிக்கும் மாணவர்கள் மட்டுமே உறுப்பினராக இருக்க முடியும்.
- மனித உரிமை மாணவர் மன்றத்தில் முழுமையாகப் பங்கேற்பதாக உறுதியளிக்க வேண்டும்.
- உறுப்பினராக விருப்பம் தெரிவிக்கும் மாணவி, மாணவர்கள் தங்கள் பெயரை மனித உரிமைக் கல்வி ஆசிரியரான ஆலோசகரிடம் அளிக்க வேண்டும்.
- மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கும், மாணவிகளுக்கும் சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

### உறுப்பினர்கள்:-

- கூட்டங்களிலும் / செயல்பாடுகளிலும், பங்கெடுக்க உரிமையுண்டு.
- கூட்டாக முடிவெடுப்பதில் பங்கேற்க உரிமையுண்டு
- மனித உரிமை மீறல்களை அடையாம் கண்டு தகவல் தெரிவிக்கவும் ஆதரவு தரவும் மற்றும் மன்றத்தில் விவாதிக்கவும் உரிமையுண்டு.
- உறுப்பினர்கள் அனைவரும் துணைக் குழுக்களில் பங்கேற்க உரிமையுண்டு.

## துணைக் குழுக்கள்:-

துணைக் குழுவில், தேர்ந்தெடுக்கபட்ட தன்னார்வலர்கள் மன்றத்தின் பணித் தளங்களின் உறுப்பினர்களாக இருப்பர். துணைக் குழு என்பது கலை மற்றும் ஊடகம், ஆவணம் மற்றும் நூலகம், செயல்பாட்டு ஆய்வுகள், விழிப்புணர்வு மற்றும் திறன் வளர்ப்பு, கண்காணிப்பு மற்றும் குறை தீர்த்தல், ஆதரவு திரட்டுதல் மற்றும் வழக்காடல் மற்றும் இணைப்பை ஏற்படுத்துபவர்களாக இருத்தல்.

## பணிகள்:-

- ஓராண்டிற்கான ஆண்டு திட்டத்தைத் தயார் செய்து மையக் குழுவிற்கு வழங்குதல்.
- ஆண்டு திட்டத்தை மையக்குழு நடைமுறைப்படுத்துதல்.
- வருடத்திற்கு 3 திறனாய்வுக் கூட்டங்களை நடத்துதல்.
- இரு பிரதிநிதிகளைத் தேர்வு செய்தல் (இருபாலர் பள்ளியெனில் ஒரு மாணவனும் ஒரு மாணவியும்) அவர்களில் ஒருவர் துணைக் குழுவின் செயலராக செயல்படுவார்.
- தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தொடர்ந்து 3 துணைக் குழு கூட்டத்திற்கு வராமல் இருப்பின் துணைக் குழு அவரை நீக்குவதாகத் தீர்மானம் நிறைவேற்றி அவருக்கு மாற்றாக வேறொரு உறுப்பினரைத் தெரிவு செய்யும்.

## மையக் குழு:-

மையக்குழு என்பது துணைக் குழுவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் குழு ஆகும். மையக் குழுவே மனித உரிமை மாணவர் மன்றத்தின் நிர்வாகக் குழுவாக இருக்கும். நிர்வாகக் குழுவினரே மாதாந்திரக்

கூட்டத்தைக் கூட்டுவது, அனைத்து உறுப்பினர்களும் பங்கேற்கும் பொதுக் குழுவைக் கூட்டுவது போன்ற பணிகளைச் செய்வர். செயலரே கூட்டத்தின் அறிக்கைகளை எழுதுவது மற்றும் ஆவணப்படுத்தும் பணியினைச் செய்வார்.

**பணிகள்:-**

1. ஆண்டுத் திட்டத்தை இறுதி செய்தல்.
2. நடைமுறைப்படுத்துவதை ஒருங்கிணைத்தல் மற்றும் நெறிப்படுத்துதல்.
3. மாதாந்திர கூட்டங்களுக்கான விவாதப் பொருளை இறுதி செய்தல்.
4. மாதாந்திர கூட்டங்களை நடத்துதல்.
5. மன்றத்தின் அமைப்பாளர் மற்றும் செயலாளரைத் தேர்ந்தெடுத்தல் (இருபாலர் பள்ளி எனில் ஒரு மாணவன்,ஒரு மாணவி).
6. வருடத்திற்கு ஒரு முறை அமைப்பாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.
7. மையக் குழுவின் ஆலோசனையுடன் அமைப்பாளர்கள் செயல்படுவார்கள்.
8. தொடர்ந்து மூன்று மையக்குழு கூட்டங்களுக்கு வராமல் இருப்பின் அமைப்பாளர்கள் மற்றும் செயலர் மாற்றப்படுவர்.

## நெறியாளர் (பள்ளிக்கு வெளியே)

மனித உரிமை மாணவர் மன்றத்தில் பள்ளிக்கு வெளியே நெறியாளராக மனித உரிமை கல்வி நிறுவனத்தின் பிரதிநிதியே உறுப்பினராக இருப்பார். பிரதிநிதிகள் பெரும்பாலும் மனித உரிமைக் கல்வி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் சமூகப் பணியாளர்கள் ஆவர்.

**பணிகள்:-**

- பள்ளியில் மனித உரிமை மாணவர் மன்றங்களை அமைக்க பள்ளி நிர்வாகத்தை ஊக்குவித்தல்.
- மனித உரிமைகள் மற்றும் மனித உரிமை மாணவர் மன்றம் பற்றி ஆசிரியர்களுக்கும் மாணாக்கருக்கும் பயிற்சியளித்தல்.
- பள்ளிகளில் மனித உரிமை மாணவர் மன்றம் அமைக்க உதவுதல்.
- மனித உரிமை மாணவர் மன்றம் சிறப்பாகச் செயல்பட வழிகாட்டலும் மாணவர் மன்றக் கூட்டத்தில் பங்கேற்றலும்.
- மன்றம் சிறப்பாகச் செயல்படுவதற்கான ஒரு சிறந்த தொடர்பாளராகச் செயற்படல்.

**நெறியாளர் (பள்ளிக்கு உள்ளே)**

மனித உரிமைக் கல்வி பயிற்சி பெற்ற, தலைமை ஆசிரியரால் தெரிவு செய்யப்பட்ட ஒருவரே பள்ளிக்கு உள்ளே நெறியாளராக செயல்படுவார். பள்ளி மாணவர்களின் கருத்துக்களை மனதிற் கொண்டே உள் நெறியாளரைத் தெரிவு செய்வர்.

**பணிகள்:-**

1. மனித உரிமை மாணவர் மன்றம் தொடங்க உதவி செய்வது மற்றும் ஊக்குவிப்பது
2. மையக்குழுவைச் சிறப்பாகச் செயல்பட வைத்தல்.

3. மனித உரிமை மாணவர் மன்றத்திற்கும் பள்ளி நிர்வாகத்திற்கும் தொடர்புப் பாலமாக இருத்தல்.

4. மனித உரிமை மாணவர் மன்றங்கள் மனித உரிமை மீறல்களைத் திறமையாக எதிர்கொள்ளத் துணையாக இருப்பது.

5. ஆண்டுத் திட்டத்தின் அடிப்படையில் செயல்பாடுகளைச் சிறப்பாகச் செயல்பட உதவுதல்.

**புரவலர்:-**

பள்ளித் தலைமையாசிரியரே வழக்கமாக மனித உரிமை மாணவர் மன்றத்தின் புரவலராக இருப்பர்.

**பணிகள்:-**

1. அனுமதியளித்தல்

2. பள்ளியில் மனித உரிமை மாணவர் மன்றம் சிறப்பாகச் செயல்பட உதவி செய்தல்.

3. மனித உரிமைக் கல்வி நிறுவனத்தின் நெறியாளருடன் கலந்தாய்வு செய்து சரியான உள் நெறியாளரை அடையாளம் காணுதல்.

## அத்தியாயம் -5

### மாணவர் மன்றம் அமைக்கப்படுவதின் படிநிலைகள்:-

### 1. மனித உரிமை மாணவர் மன்றம் கருத்தினை அறிமுகம் செய்தல்:-

- வெளி நெறியாளர், தலைமை ஆசிரியர் மற்றும் பள்ளி நிர்வாகத்துடன் கலந்து பேசி மாணவர் மன்றம் உருவாக்க முயற்சி செய்வார்.
- பள்ளியில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் மனித உரிமைகள் பற்றி பகிர்ந்து கொள்ள சிறப்புக் கூட்டம் நடத்தப்படும்.
- பள்ளித் தலைமையாசிரியருடன் கலந்தாலோசித்து உள் நெறியாளராக ஓர் ஆசிரியரைத் தெரிவு செய்வார்.

### 2. சேர்க்கை:-

- மன்ற சேர்க்கைக்கான படிவங்களை வழங்குதல்.
- உள் நெறியாளரால் கையொப்பமிடப்பட்டுப் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களைத் திரும்பப் பெறுதல்.
- பதிவு செய்த உறுப்பினர்களின் தொகுப்பைப் பதிவு செய்தல்.

### 3. முதல் பொதுக் குழு கூட்டம்:-

வருடத்திற்கு மூன்று முறை பொதுக் குழு கூட்டம் நடைபெறும். மனித உரிமை மாணவர் மன்றத்தில் பதிவு செய்த உறுப்பினர்கள் கலந்து கொள்வர். முதல் பொதுக் குழுக் கூட்டம் உள் நெறியாளரால், வெளி நெறியாளர் மற்றும் தலைமை ஆசிரியர் ஆலோசனையுடன் நடைபெறும்.

## முதல் கூட்டத்திற்கான உள்ளடக்கம்:-

1. துணைக் குழுக்களை உருவாக்கல்.
2. துணைக் குழுவில் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்தல்.
3. துணைக் குழுவின் பிரதிநிதிகளைக் கொண்ட மையக் குழுவை அமைத்தல்.
4. அமைப்பாளர் மற்றும் செயலரைத் தேர்ந்தெடுத்தல். (இருபாலர் பள்ளியாக இருந்தால் அமைப்பாளர்களாக ஒரு பெண் மற்றும் ஓர் ஆண் என இரு அமைப்பாளர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.)
5. மன்ற தொடக்க விழாவிற்கான தேதியை முடிவு செய்தல்.
6. மன்ற துவக்க விழாவிற்குச் சிறப்பு அழைப்பாளர்களின் பட்டியலைத் தயார் செய்தல். (உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கல்வித் துறை அதிகாரிகள், முன்னாள் மனித உரிமை மாணவர் மன்ற மாணவர்கள், அருகிலுள்ள பள்ளியிலிருந்து ஆசிரியர்கள், குடிமை சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஊடகங்கள்).
7. மனித உரிமை மாணவர் மன்றப் பெயர் பலகை தயார் செய்தல்.
8. ஆண்டுத் திட்டத்தைத் தயார் செய்வதற்கான தேதியினை முடிவு செய்தல்.

## ஆண்டுத் திட்டம் தயார் செய்தல்:-

மனித உரிமை மாணவர் மன்றத்தில் உள்ள துணைக் குழுக்கள் தங்கள் குழுவில் உள்ள உறுப்பினர்களோடு கலந்துரையாடி ஆண்டுத் திட்டத்தைத் தயார் செய்ய வேண்டும். இவ்வாண்டுத் திட்டத்தைத் தயார் செய்ய உள் மற்றும் வெளி நெறியாளர்களின் வழிகாட்டுதலின்படி துவக்க விழாவிற்கு முன்னதாகவே தயார் செய்ய வேண்டும். தயார் செய்ததை துவக்க விழாவில் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

## மனித உரிமை மாணவர் மன்றம் துவங்குதல்.:-

மனித உரிமை மாணவர் மன்ற தொடக்க நிகழ்வு என்பது, பள்ளியில், குடிமைச் சமூக அமைப்பு, அரசு அதிகாரிகள், ஊடகங்கள் மற்றும் மனித உரிமை நிறுவனங்களின் பார்வைக்குத் தெரியும் வண்ணம் தொடங்க வேண்டும். நம் பள்ளியில் அனைவரிடமும் நமக்கான மாணவர் மன்றம் என்ற எண்ணத்தை ஏற்படுத்த வேண்டும்.

## துவக்க விழா நிகழ்ச்சி நிரல்:-

1. சிறப்பு அழைப்பாளரை மேடைக்கு அழைத்தல்.
2. மாணவர் மன்றம் குறித்த அறிமுகம்.
3. துணைக் குழுக்கள், மையக்குழு உறுப்பினர், அமைப்பாளர்கள் மற்றும் செயலரைப் பற்றிய அறிமுகம்.
4. மனித உரிமை மாணவர் மன்ற தகவல் பலகையினைத் திறந்து வைத்தல் (சின்னம், முழக்கம், பள்ளிகள் பெயர், இடம், மன்றத்தின் பெயர், மன்றம் துவங்கும் தேதி.
5. மன்றம் துவங்கியதன் அடையாளமாக பேட்ஜ் அணிதல், உறுப்பினர் அட்டை வழங்குதல், உறுதிமொழி எடுத்தல், உறுப்பினர் பதிவேட்டில் கையெழுத்திடுவது, மனித உரிமை மாணவர் மன்ற பாடலைப் பாடுதல்.
6. அச்சிடப்பட்ட மன்றத்தின் சட்ட விதிமுறைகளைப் பங்கேற்பாளர்களுக்கு வழங்குதல்.
7. துணைக் குழுக்கள் ஆண்டுத் திட்டத்தினைச் சமர்ப்பித்தல்.
8. சிறப்பு அழைப்பாளரின் சிறப்புரை.
9. கலை நிகழ்ச்சிகள்.
10. நிகழ்ச்சியை நிறைவு செய்தல்

## அத்தியாயம் -6

### கூட்டங்களை நடத்தும் முறை

### மையக் குழு கூட்டம்:-

1. மாதந்தோறும் நடத்த வேண்டும். (குறிப்பிட்ட தேதி மற்றும் நாள்)
2. கூட்ட நேரம் 45 நிமிடங்களிலிருந்து 1 மணி நேரம் வரை.
3. ஒருங்கிணைப்பாளர்கள் முன்கூட்டியே உறுப்பினர்களுக்கு கூட்டம் நடைபெறும் நாள் மற்றும் தேதி பற்றி அறிவுறுத்த வேண்டும்.
4. செயலாளர், மையக்குழு உறுப்பினர்களுடன் ஆலோசித்து கூட்டத்தின் விவாதப் பொருளைத் தயார் செய்வார்.
5. வருகைப் பதிவேட்டில் பதிவு செய்தல்.
6. கூட்ட அறிக்கையையும் தீர்மானத்தையும் உறுப்பினர்கள் படித்து அதைப் பற்றித் தெளிவு பெற்ற பிறகு நிறைவேற்ற வேண்டும்.
7. துணைக் குழுக்களின் திட்டம் மற்றும் அறிக்கை அக்குழுக்களின் பிரதிநிதிகளால் சமர்ப்பிக்கப்படும்
8. செயல்பாடுகளை மீளாய்வு செய்தல்.
9. மனித உரிமை மீறல்களை அடையாளம் கண்டு நம் அளவில் தலையீடு செய்ய வேண்டும்.
10. கருத்துரிமைப் பெட்டியில் பெறப்பட்ட ஆலோசனைகள் மீது விவாதங்கள் நடத்தப்பட வேண்டும்.
11. மாதாந்திர கூட்டங்களில் நடப்பு பிரச்சனைகளை மையப்படுத்தி விவாதம் அமைய வேண்டும்.

## மனித உரிமை மாணவர் மன்ற கூட்டங்கள்:-

(பொதுக் குழு/ துணைக் குழுக்களின் கூட்டங்கள்-ஜுலை, அக்டோபர், ஜனவரி)

### நிலை-1

1. அமைப்பாளர்கள் முன்கூட்டியே உறுப்பினர்களுக்குக் கூட்டம் நடைபெறும் நாள் மற்றும் தேதி பற்றி அறிவுறுத்த வேண்டும்.
2. செயலாளர், மையக்குழு உறுப்பினர்களுடன் ஆலோசித்து கூட்டத்தின் விவாதப் பொருளைத் தயார் செய்வார்.
3. மனித உரிமை மாணவர் மன்ற பாடல் பாடப்பட வேண்டும்.
4. கூட்டத் தீர்மானங்கள் மற்றும் அறிக்கையினை உறுப்பினர்களின் ஒப்புதலுடன் நிறைவேற்ற வேண்டும்.

### நிலை-2

1. துணைக் குழுக்களின் கூட்டங்கள்
2. வருகைப் பதிவேடு
3. துணைக் குழுவின் குறிப்புகள்
4. துணைக் குழுவின் அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் மீளாய்வு செய்தல்
5. செயல்பாட்டு அறிக்கை தயார் செய்தல்.
6. சமகால பிரச்சனைகளைத் திட்டத்தில் சேர்த்தல்.

### நிலை-3

1. துணைக் குழுக்களின் திட்டத்திற்குப் பிறகு பொதுக் குழுவிற்குத் திரும்புதல்
2. துணைக் குழுவில் திட்டமிட்டவைகளைப் பொதுக் குழுவில் பகிர்ந்து கொள்ளச் செய்தல்.
3. திட்டத்தை அதிகாரப் பூர்வமாக முடிவு செய்தல்.
4. இறுதியாக பாடல்கள்/முழக்கத்தோடு கூட்டத்தை முடித்தல்.

## அத்தியாயம் - 7

## மன்றங்கள் வழி என்னென்ன செயல்பாடுகள் செய்யலாம் - சில பரிந்துரைகள்

மனித உரிமை மாணவர் மன்றத்தின் துணைக் குழுக்களுக்காகச் சில செயல்பாடுகள். ஒவ்வொரு மன்றமும் தங்கள் சூழலுக்கு ஏற்ப இன்னும் பிற நிகழ்வுகளை இணைத்துக் கொள்ளலாம்.

### கலை மற்றும் ஊடகம்

இத்துணைக் குழு, கலை வடிவங்கள் மற்றும் ஊடகங்கள் மூலமாக மனித உரிமை மாணவர் மன்றம் தனது இலக்கை அடைய துணை செய்ய வேண்டும்.

**செயல்கள்:-**

1. தெரு நாடகங்கள்
2. விழிப்புணர்வுப் பாடல்கள்
3. ஆவணப் படங்கள் திரையிடல்
4. ஓவியம் வரைதல் மற்றும் பாடல்கள் எழுதுதல்
5. ஊடகங்கள் மூலமாக நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும். (வானொலி, எப்.எம். ரேடியோக்கள், தொலைக்காட்சி, உள்ளூர் தொலைக்காட்சி நிறுவனங்கள் இன்னும் பல)
6. பத்திரிகையாளர் கூட்டம், பத்திரிகையில் செய்திகள் கொடுப்பது.
7. வெளியீடுகள்
8. பத்திரிகைச் செய்தி தயார் செய்வதும் அனுப்புவதும்.
9. மனித உரிமை தினங்கள் கொண்டாடுதல்.
10. தகவல் பலகை
11. நாட்டுப்புறக் கலைகள் மற்றும் விளையாட்டுகள்

**பதிவேடுகள்/நூலகம்/பங்கேற்பு முறையிலான ஆய்வுகள்:**

இக்குழு மனித உரிமைகள் தொடர்பான செயல்பாடுகளை சிறப்பாகச் செய்ய போதிய தகவல்களை, ஆவணங்களை அளிப்பது மற்றும் பாதுகாப்பது.

**செயல்பாடுகள்:-**

- பத்திரிகையில் வரும் மனித உரிமை தொடர்பான செய்திகளைச் சேகரிப்பது, தொகுப்பது மற்றும் உறுப்பினர்களின் பார்வைக்கு வைப்பது.
- பள்ளியிலும் வீட்டிலும் அக்கம் பக்கத்திலும் நடைபெறும் மனித உரிமை மீறல்களை அடையாளம் காணுதல் மற்றும் பதிவு செய்தல்.
- மனித உரிமை சார்ந்த கருத்தாதாரங்களையும் தகவல்களையும் சேகரித்தல்.
- துணைக் குழுக்கள் மற்றும் மனித உரிமை மாணவர் மன்ற அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளைப் பராமரித்தல்.
- மனித உரிமைகள் தொடர்பான பிரச்சனைகளைப் பற்றி எழுத மற்றும் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துதல்.
- மனித உரிமைகள் மற்றும் குழந்தைகள் தொடர்பானநூல்களைச் சேகரித்தல்.
- குழந்தைகளுக்குச் சாதகமான சட்டங்கள், திட்டங்களைத் தொகுத்தல்.
- பள்ளி இடை நிறுத்தம், குழந்தைத் தொழிலாளர்கள், மூளை வளர்ச்சி குறைந்த குழந்தைகள் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய தகவல்களைச் சேகரித்தல்.

## விழிப்புணர்வு மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி:-

மனித உரிமை மாணவர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் பள்ளியில் உள்ள பிற குழந்தைகளுக்கு மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வும் திறன்களையும் வளர்க்கும் பணியையும் செய்யும்.

### செயல்பாடுகள்:-

- மனித உரிமைகள், குழந்தை உரிமைகள், வாழ்க்கைத் திறன்கள் மற்றும் பிற மனித உரிமைகள் சார்ந்த திறன்கள் தொடர்பாக பயிற்சிகள்.
- மனித உரிமைகள் சார்ந்த விவாதம், கலந்துரையாடல் மற்றும் வினாடி வினா போன்ற நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- சமூக விழிப்புணர்வு பாடல்களைக் கற்றுக் கொள்வதும் கற்றுக் கொடுப்பதும்.
- சமூக பிரச்சனைகள் குறித்து குழந்தைகள் மன்றத்தில் விவாதித்து தமது கருத்துக்களை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

## கண்காணிப்பு மற்றும் குறைதீர்த்தல்:-

இத்துணை குழுவானது மனித உரிமை மீறல்களின் போது அவர்களின் குறை தீர்க்கக் கூடிய ஒரு குழுவாக செயல்பட்டு அவர்களின் குறைகளை விரைவாக தீர்க்க முயலும்.

### செயல்பாடுகள்:-

- குழந்தை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் குறித்த பிரச்சனைகளை அடையாளம் கண்டு அவைகளுக்குக் குறைந்தபட்சம் தங்களுடைய எதிர்வினை/மறுமொழியினை அளிக்க வேண்டும்.

- தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.
- பள்ளி, வீடு, மற்றும் சுற்றுப் புறத்தில் நிகழும் மனித உரிமை மீறல்களை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.
- குழந்தைகளின் கட்டாய இலவசக் கல்வி உரிமைச் சட்டம், தகவல் பெறும் உரிமைச் சட்டம், மற்றும் குழந்தைகள் உரிமைகள் சம்மந்தப்பட்ட திட்டம் மற்றும் சட்டங்களைத் தெரியப்படுத்த வேண்டும்.
- பள்ளிகளில் கருத்துரிமைப் பெட்டி வைக்க வேண்டும். அவைகளை மாதத்திற்கு ஒரு முறை சேகரித்து மாணவர் மன்றக் கூட்டத்தில் விவாதித்து மாதாந்திர திட்டமிடலில் அவைகளையும் இணைக்க வேண்டும். தேவையான சமயங்களில் தலைமையாசிரியரின் கவனத்திற்குக் கொண்டுச் செல்ல வேண்டும்.

## வழக்காடல் மற்றும் ஆதரவு திரட்டுதல்/ இணைத்தல்:-

இத்துணைக் குழு பள்ளி நிர்வாகம், பெற்றோர் ஆசிரியர் கழகம், கிராமக் கல்விக் குழு மற்றும் குடிமைச் சமூக அமைப்புகளோடு இணைந்து செயல்படும்.

- உள்ளாட்சிப் பிரதிநிதிகளோடு இணைந்த வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- பிற மனித உரிமை மாணவர் மன்றங்கள், குழந்தைகள் பாராளுமன்றம் மற்றும் குடிமைச் சமூக அமைப்போடு இணைந்து செயல்படுதல்.
- கிராம சபைக் கூட்டங்கள் மற்றும் பிற குழந்தைகள் தொடர்பான ஒன்று கூடல்கள், மாநாடுகள், கருத்தரங்குகளில் கலந்து கொள்ளுதல்.

## அத்தியாயம் - 8

### முடிவுரை:-

முழுமையாக, முறையாக, மனித உரிமை மாணவர் மன்றங்களை உருவாக்குவதற்காக எடுக்கப்பட்ட ஒரு முயற்சி. இந்த மன்றம் என்பது வெறும் குழந்தைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பு அல்ல. இது ஆழமான புரிதலையும் அர்த்தத்தையும் செயல்பாட்டையும் உள்ளடக்கியது. நம் வாழ்க்கையில் சமத்துவம் மற்றும் பாகுபாடற்ற உணர்வைக் கலாச்சாரமாகப் பேணுதற்குத் துணை நிற்பது. மனித உரிமைகள் என்பது ஒரு கருத்தியல் பொருளன்று. மாறாக, நம் அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்தக் கூடிய ஒன்று.

நாம் எவ்வளவு சாதுர்யமாக சமூக சூழலுக்கு ஏற்றவாறு நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது நம் முன்னால் உள்ள சவால் ஆகும். கடினமான நிலையில் உள்ள நமது சமூகத்தில் மனித உரிமை பற்றிப் பேசுவது எளிது, ஆனால் நடைமுறைப்படுத்துவது எளிதில்லை. இதனை நடைமுறைப்படுத்துவது என்பது நம்முடைய அனைவரின் கைகளிலும் உள்ளது. நாம் நமது அடுத்த தலைமுறையை எவ்வாறு உருவாக்கப் போகிறோம் என்பதைப் பொறுத்தே நமது எதிர்காலம் அமையும். மனித உரிமை மாணவர் மன்றம், நமது மாணவர்கள் இத்தகைய புதியதொரு சமுதாயத்தை உருவாக்க வழிகோலும்.

**பள்ளிகளில் மனித உரிமை மாணவர் மன்றம்**

**ஒருங்கிணைப்பு**

**மனித உரிமைக் கல்வி நிறுவனம்**

**6, வல்லபாய் சாலை, சொக்கிகுளம், மதுரை–625002**

# மனித உரிமை மாணவர் மன்றம்

**உறுப்பினர் சேர்க்கைப் படிவம்**

**அ. பொதுவான தகவல்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. பள்ளியின் பெயர் | : | | 3. ஊராட்சி / நகராட்சி | : | |
| 2. கிராமம் / நகரம் | : | | 4. ஒன்றியம் | : | |
| 5. பள்ளி: | : | அரசு/அரசு உதவி பெறும்/ தனியார் | | | |
| 7. பள்ளியின் தரம் | : | ஆரம்பநடுநிலை/உயர்நிலை/மேல்நிலை | | | |
| 8. மாவட்டம் | : | | அஞ்சல் குறியீட்டு எண் | : | |

**ஆ. மாணாக்கர் தகவல்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | | தாய்/தந்தைப் பெயர் | : | |
| வயது | : | | படிக்கும் வகுப்பு/பிரிவு | : | |
| கிராமம் | : | | ஊராட்சியின் பெயர் | : | |
| ஒன்றியம் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | அஞ்சல் குறியீட்டு எண் | : | |

**இ. உறுதிமொழி**

மனித உரிமைக் கல்வி மாணவர் மன்றத்தில் உறுப்பினராக இணைந்து மனித உரிமைகளை வளர்த்தெடுப்பதிலும் பாதுகாப்பதிலும் முழு உறுதியுடன் பங்கேற்பேன் என்று உறுதி கூறுகிறேன்.

**கையொப்பம்:**..................................

# மனித உரிமை மாணவர் மன்ற பாடல்

மனித உரிமைக் கல்வித் தோட்டத்தில்
துளிர்த்த பூச்செடிகள்–நாங்கள்
மனித உரிமை மாணவர் மன்றத்தின்
எழுச்சி மாணவர்கள்

பாகுபாடுகளை வேரறுப்போம்
பன்முகத் தன்மையை மதித்திடுவோம்
சமத்துவ விதைகளைத் தூவிடுவோம்
சகோதரத்தை வென்றெடுப்போம்....

(மனித உரிமைக் கல்வி)

வாழ்வதற்கான உரிமையுண்டு
சமத்துவ உரிமையும் எமக்கு உண்டு
சுதந்திரமாக நடந்து கொள்ளவும்
மாண்பைக் காக்கவும் உரிமையுண்டு...

(இனி பாகுபாடுகளை வேரறுப்போம்)

குழந்தைகள் நாங்கள் உயிர் வாழ–எம்
பாதுகாப்பினை உறுதி செய்ய
வளர்ந்து நாங்கள் முன்னேற
பங்கேற்றிடவும் உரிமையுண்டு.....

(இனி பாகுபாடுகளை வேரறுப்போம்)

மீறல்கள் யாவையும் இனி நாங்கள்
இம்மண்ணில் நிகழ்ந்திட அனுமதியோம்
கண்காணித்து தலையீடு செய்ய
எம்மை நாங்கள் அர்ப்பணித்தோம்....

பண்: ச. அருள்

(இனி பாகுபாடுகளை வேரறுப்போம்)

**மனித உரிமைக் கல்வி நிறுவனம்**

6, வல்லபாய் சாலை, சொக்கிகுளம், மதுரை -625002. தமிழ்நாடு
Ph:91-452-2539520 Fax: 91-452-2531874
E-Mail:ihre@pwtn.org Website: www.ihre.in / www.peopleswatch.org